இது குறித்து பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆர்.எல். இளங்கோவிடம் கேட்டபோது, "தேர்தல் புறக்கணிப்பை கைவிடக் கோரி ஆட்சியர் கலைச்செல்வி தலைமையில் கோரிக்கை வைத்தனர். ஓர் உத்தரவில் ஆட்சியர் இந்த பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை நிறுத்த முடியும். அதற்கான நடவடிக்கையை அவர் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் அதற்கான எந்த உறுதியும் கொடுக்கவில்லை. இதனால் தேர்தலை புறக்கணிப்பதாக பொதுமக்கள் முடிவு செய்துள்ளனர்" என்றார்.

Paranthur people are strong in Boycott election. The collector's negotiations with public failed.

இந்து தமிழ் திசை

12 APR 2024

### சென்னையில் நடைபெற்ற பிரதமர் 'ரோடு ஷோ'வில்

# விதிகளை மீறியதாக வழக்கு பதிவு

● சென்னை

சென்னையில் நடைபெற்ற பிரதமர் மோடியின் ரோடு ஷோவில் விதிமீறல் நடந்ததாக போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள மொத்தம் 40 மக்களவைத் தொகுதிகளுக்கும் வரும் 19-ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. இதற்காக அனைத்து கட்சிகளும் தேர்தல் பரப்புரையில் தீவிரம் காட்டி வருகின்றன.

தமிழகத்தில் பாஜக மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள பிரதமர் நரேந்திர மோடி கடந்த செவ்வாய்க்கிழமை சென்னை வந்தார். அன்று மாலை பனகல் பூங்கா முதல் பாண்டி பஜார் வழியாக தேனாம்பேட்டை சிக்னல் வரை சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் ரோடு ஷோவில் (வாகனப் பேரணி) கலந்து கொண்டு தென் சென்னை, மத்திய சென்னை, வட சென்னை பாஜக வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

இந்நிலையில், சென்னையில் நடைபெற்ற பிரதமர் மோடியின் வாகனப் பேரணியில் தேர்தல் நடத்தை விதிமீறல் நடந்ததாக பாண்டிபஜார் மற்றும் மாம்பலம் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். குறிப்பாக தேர்தல் நடத்தை விதிகளை மீறி விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டதாக தேர்தல் பறக்கும் படை அதிகாரி அளித்த புகாரின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

Case registered against BJP Party for MCC violations at Thiru Modi's road show in Chennai

இந்து தமிழ் திசை
12 APR 2024

நீலகிரி மாவட்டம் கூடலூரில்

# முன்னாள் ஊராட்சி தலைவர் வீட்டில் ரூ.3 கோடி ரொக்கம் பறிமுதல்

## வருமான வரி துறையினர் நடவடிக்கை



கூடலூரில் வருமான வரித் துறையினர் நேற்று சோதனை மேற்கொண்ட முன்னாள் ஊராட்சி தலைவர் தாமஸ் வீடு. (உள்படம்) தாமஸ்.

● கூடலூர்/திருவண்ணாமலை

நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா ஸ்ரீமதுரை ஊராட்சிக்கு உட்பட்ட மண்வயல் கம்மாத்தி பகுதியைச் சேர்ந்தவர் ஏ.ஜெ. தாமஸ். இவர், ஸ்ரீமதுரை ஊராட்சி முன்னாள் தலைவர். காங்கிரஸ் கட்சிப் பிரமுகரான இவர், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் துணைத் தலைவராகவும் பொறுப்பு வகிக்கிறார்.

இந்நிலையில், இவரது வீட்டில் கோடிக்கணக்கில் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக வருமான வரித் துறைக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, அவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் 8 பேர் அடங்கிய வருமான வரித் துறை அதிகாரிகள் குழுவினர் இரு கார்களில் வந்தனர். வீட்டில் உள்ள அனைவரிடமும் அவர்கள் விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து, வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சோதனை மேற்கொண்ட அதிகாரிகள், பீரோ மற்றும் லாக்கர்களிலும் சோதனை நடத்தினர். சுமார் 20 மணி நேரத்துக்கும் மேல் சோதனை நடத்தப்பட்டது. இதில், கணக்கில் வராத ரூ.3 கோடி ரொக்கம் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக வருமான வரித் துறை அதிகாரிகள் கூறும்போது, கூடலூர் காங்கிரஸ் நிர்வாகி தாமஸ் வீட்டில் கோடிக்கணக்கில் பணம் பதுக்கப்பட்டிருப்பதாக புகார் வந்ததால், சோதனை நடத்தினோம்.

இதில், கணக்கில் வராத ரூ.3 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை வாக்காளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக வைத்திருந்தாரா என்பது குறித்து தெரியவில்லை. தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது, என்றார்.

### 2 நகை கடைகளில்...

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் பஜார் வீதி மற்றும் ராஜ வீதியில் 2 நகைக் கடைகள் உள்ளன. இந்தக் கடைகளில் வர்த்தகம் முடிந்து, நேற்று முன்தினம் இரவு கடையை மூடுவதற்கு உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் முற்பட்ட போது, அங்கு வந்த வருமான வரித் துறையினர், கடையில் நடைபெற்ற வர்த்தகம் மற்றும் பணப்பரிவர்த்தனை குறித்து ஆய்வு செய்தனர்.

இதில், சில முக்கிய ஆவணங்கள் மற்றும் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற சோதனை இரவு 10.30 மணிக்கு நிறைவடைந்தது. பின்னர் அதிகாரிகள் அங்கிருந்து புறப்பட்டு சென்றனர்.

IT Dept Raid at former village president house at Nilgiris Dist. 3 Crores were seized by the team.

தினத்தந்தி
12 APR 2024

தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ்

# தேர்தல் பத்திர விவரங்களை அளிக்க பாரத ஸ்டேட் வங்கி மறுப்பு

புதுடெல்லி, ஏப்.12-

தகவல் அறியும் உரிமைசட்டத்தின்கீழ், தேர்தல் பத்திர விவரங்களை அளிக்க பாரத ஸ்டேட் வங்கி மறுத்துள்ளது.

## தேர்தல் கமிஷனிடம் ஒப்படைப்பு

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க பயன்படும் தேர்தல் பத்திரங்கள் சட்டவிரோதமானவை என்று கடந்த பிப்ரவரி 15-ந் தேதி சுப்ரீம்கோர்ட்டு தீர்ப்பு அளித்தது. இதுவரை பெறப்பட்ட தேர்தல் பத்திரங்களின் விவரங்களை மார்ச் 6-ந் தேதிக்குள் தேர்தல் கமிஷனிடம் ஒப்படைக்குமாறு பாரத ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டது.

ஜூன் 30-ந் தேதிவரை கால நீட்டிப்பு அளிக்குமாறு பாரத ஸ்டேட் வங்கி கேட்டதை ஏற்க மறுத்து விட்டது. கோர்ட்டு உத்தரவுப்படி, மார்ச் 12-ந் தேதி, தேர்தல் கமிஷனிடம் தேர்தல் பத்திர விவரங்களை ஸ்டேட் வங்கி ஒப்படைத்தது.

அந்த விவரங்களை மறுநாள் தேர்தல் கமிஷன் தனது இணையதளத்தில் வெளியிட்டது.

இருப்பினும் தேர்தல் பத்திரங்களின் அடையாள எண்கள் அளிக்காததற்காக பாரத ஸ்டேட் வங்கி மீது சுப்ரீம் கோர்ட்டு அதிருப்தி தெரிவித்தது. அதன்பிறகே அடையாள எண்களையும் வங்கி அளித்தது.

## சட்டப்படி விலக்கு

இந்நிலையில், ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி லோகேஷ் பத்ரா என்பவர், தேர்தல் கமிஷனிடம் அளித்த தேர்தல் பத்திர முழு விவரங்களையும் டிஜிட்டல் வடிவத்தில் தனக்கு அளிக்குமாறு கடந்தமாதம் 13-ந் தேதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் பாரத ஸ்டேட் வங்கியிடம் விண்ணப்பித்தார்.

ஆனால் அவருக்கு அந்த விவரங்களை அளிக்க பாரத ஸ்டேட் வங்கி மறுத்து விட்டது. இதுகுறித்து அவ்வங்கியின் துணை பொதுமேலாளர் அளித்த பதில் வருமாறு:-

நீங்கள் கேட்ட தகவல்கள், தேர்தல் பத்திரங்கள் வாங்கிய நபர்கள் மற்றும் நன்கொடை பெற்ற அரசியல் கட்சிகள் அடங்கிய தகவல்கள் ஆகும். அவை தனிப்பட்ட தகவல்கள் ஆகும். நம்பிக்கையின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய தகவல்களை அளிக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 8(1)(இ) மற்றும் (ஜே) ஆகிய பிரிவுகளின்கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்தகவல்களை அளிக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## வினோதம்

தேர்தல் கமிஷனின் இணையதளத்திலேயே இருக்கும் விவரங்களை அளிக்க பாரத ஸ்டேட் வங்கி மறுப்பது வினோதமாக இருக்கிறது என்று லோகேஷ் பத்ரா கூறினார்.

கோர்ட்டில் வாதிட மூத்த வக்கீல் ஹரிஷ் சால்வேக்கு எவ்வளவு கட்டணம் செலுத்தப்பட்டது என்றும் லோகேஷ் பத்ரா கேட்டிருந்தார். அதையும் தெரிவிக்க வங்கி மறுத்து விட்டது.

வரி செலுத்துவோரின் பணம் சம்பந்தப்பட்ட தகவலையும் வங்கி அளிக்க மறுக்கிறது என்று பத்ரா கூறினார்.

SBI refused to give the E.B details for R.T.I act.

தினத்தந்தி

12 APR 2024

# கிராம மக்கள் தேர்தல் புறக்கணிப்பு போராட்டம்

## வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றியதால் பரபரப்பு

தென்காசி, ஏப்.12-

தென்காசி மாவட்டம் திருவேட்டநல்லூர் ஊராட்சியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கலிங்கன்குளம் உள்ளது. இதன்மூலம் சுமார் 150 ஏக்கர் விவசாய நிலம் பாசனவசதி பெறுகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகும் முந்தல் அருவியே கலிங்கன்குளத்தின் பிரதான நீராதாரமாகும்.

இந்த நிலையில் முந்தல் அருவியில் இருந்து வரும் கால்வாயை மறித்து சாலை அமைத்ததால், கலிங்கன்குளத்துக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்துள்ளது. எனவே கால்வாயில் அமைக்கப்பட்ட சாலையை அகற்றி விட்டு, அங்கு புதிய உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி திருவேட்டநல்லூர் பஞ்சாயத்து பகுதி மக்கள் வருகிற நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிப்பதாக கூறி, தங்களது வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோன்று தூத்துக்குடி மாவட்டம் தென்திருப்பேரையை அடுத்த வளவன்நகர் பகுதியில் வசிப்பவர்கள் தங்களுக்கு வீட்டுமனை பட்டா, வீட்டு தீர்வை ரசீது வழங்கி, அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டும் என்று வலியுறுத்தி, அப்பகுதி மக்கள் வருகிற நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிப்பதாக கூறி, தங்களது வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு நிலவியது.

Theni dist Thiruvettainalur village people informs that they are going to Boycott election for irrigation issue.

தினத்தந்தி

12 APR 2024

# தமிழ்நாட்டில் 10 சதவீத வேட்பாளர்கள் மீது குற்ற வழக்குகள்

## தேர்தல் ஆணையம் தகவல்

சென்னை, ஏப்.12- தமிழ்நாட்டில் 10 சதவீத வேட்பாளர்கள் மீது குற்ற வழக்குகள் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

### மனு தாக்கல்

இந்தியாவில் 18-வது நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடக்கிறது. வரும் 19-ந்தேதி தொடங்கும் இந்த தேர்தல் திருவிழா, ஜூன் மாதம் 1-ந்தேதி வரை நடக்கிறது. 4-ந்தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. 19-ந்தேதி நடைபெறும் முதல் கட்ட தேர்தலில் தமிழ்நாடு உள்பட 21 மாநிலங்களில் உள்ள 102 நாடாளுமன்ற தொகுதிகளில் தேர்தல் நடக்கிறது. அதில் தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரே கட்டமாக 39 தொகுதிகளிலும் நடக்கிறது.

தமிழ்நாட்டில் 19-ந்தேதி நடைபெறும் ஓட்டுப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன. இங்கு மொத்தமுள்ள 39 தொகுதிகளுக்கு 1,748 பேர் வேட்பு மனு தாக்கல் செய்து இருந்தனர். அதில் 1,096 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்றுகொள்ளப்பட்டன. 575 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 77 பேர் தங்களது மனுக்களை வாபஸ் பெற்றுகொண்டனர். இறுதியாக தற்போது 950 பேர் போட்டியிடுகின்றனர். அதில் 96 பேர் மீது குற்ற வழக்குகள் உள்ளன. அதாவது மொத்த வேட்பாளர்களில் இது 10.10 சதவீதம் ஆகும்.

### குற்ற வழக்குகள்

ஒரு வேட்பாளர் மீது உள்ள போடப்பட்டுள்ள வழக்குகளை சாதாரண வழக்குகள், சிவில் வழக்குகள் மற்றும் குற்ற வழக்குகள் என பிரிக்கப்படுகின்றன. அதில் சாதாரண வழக்குகள் என்பது போராட்டங்கள் போன்ற சிறு சம்பவங்கள் மீது போடப்படும் வழக்குகள், சொத்து மற்றும் இதர பிரச்சினைகள் தொடர்பாக சிவில் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

திருட்டு, கொலை, கற்பழிப்பு, ஊழல் போன்றவை கிரிமினல் வழக்குகளின் கீழ் வருகின்றன. வேட்பாளர்கள், வேட்பு மனு தாக்கல் செய்யும் போது தங்களது பிரமாண பத்திரத்தில் அனைத்து வழக்குகளையும் குறிப்பிட வேண்டும். அதில் தேர்தல் ஆணையம், குற்ற வழக்குகள் பதிவு செய்து இருக்கும் வேட்பாளர்களின் விவரங்களை கூடுதல் கவனம் எடுத்து ஆய்வு செய்கிறது.

E.C. informs that 10% of candidates in Tamil Nadu have Criminal Cases

தினத்தந்தி

12 APR 2024

### தேர்தல் ஆணையத்தில் புகார் எதிரொலி

# தொகுதி வேட்பாளர்களின் செலவினங்களைத்தான் கேட்டேன்

## நீலகிரி கலெக்டர் விளக்கம்

ஊட்டி, ஏப்.12-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அருணா மீது தேர்தல் ஆணையத்தில் அதிகாரி ஒருவர் புகார் அளித்துள்ளார். அந்த புகார் மனுவில், "நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள சார் கருவூலகத்தில் தலைமை அலுவலகத்தில் உதவி செலவின கணக்கீட்டாளராக பணியாற்றி வருகிறேன். தேர்தல் செலவு விவரங்களை கணக்கிட்ட போது தி.மு.க. வேட்பாளர் தாக்கல் செய்த செலவில் பல லட்சங்கள் வித்தியாசம் உள்ளது. நீலகிரி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அருணா, ஆ.ராசாவின் செலவின விவரங்களை குறைத்துக்காட்ட வலியுறுத்துகிறார். தேர்தல் பணிகளை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்த இடையூறு செய்கிறார். அதனால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்து இருப்பதாக தெரிகிறது.

இதுகுறித்து தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான அருணா கூறுகையில், "தேர்தல் விதிமுறைப்படி, நீலகிரி தொகுதியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களின் செலவின விவரங்களையும் கேட்டேன். ஆனால் தி.மு.க. வேட்பாளரின் செலவு விவரங்கள் மட்டும் உள்ளதாக உதவி செலவின கணக்கீட்டாளர் கூறினார். இதனால் அதைமட்டும் நான் பார்வையிட்டேன். மேலும் அனைத்து விவரங்களையும் ஏன் தரவில்லை என்று அவரை கண்டித்தேன். தேர்தல் விதிமுறைப்படி தான் செயல்படுகிறேன்" என்றார்.

இதுகுறித்து தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகுவிடம் கேட்டபோது, 'புகார் தொடர்பாக உரிய தேர்தல் அதிகாரியிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. அந்த விளக்கம் பெற்ற பிறகு அதன் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

Petition to CEO against DEO, Nilgiris regarding Big different in the DMK candidate Election expenditure.

தினத்தந்தி

12 APR 2024



# வாக்குச்சாவடி மாற்றத்தை கண்டித்து பொதுமக்கள் போராட்டம்

## தேர்தலை புறக்கணிக்கப்போவதாகவும் அறிவிப்பு

நாகர்கோவில், ஏப்.12-

நாகர்கோவில் அருகே உள்ள பள்ளம்துறை பகுதியில் உள்ள புனித யூதா ததேயூ மேல்நிலைப்பள்ளியில் 4 வாக்குச்சாவடிகள் இயங்கி வருகிறது. இந்த வாக்குச்சாவடிகளில் பள்ளம் துறை, அன்னை நகர் என சுமார் 4 ஆயிரம் பேர் வாக்களித்து வந்தனர்.

தற்போது இதிலிருந்து ஒரு வாக்குச்சாவடி பிரிக்கப்பட்டு அன்ன்ன நகரில் உள்ள இ-சேவை மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குச்சாவடியில் அன்னை நகர் மக்கள் வாக்களிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பள்ளம் துறையில் இருந்து 36 வாக்குகள் அன்னை நகர் வாக்குச்சாவடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதையறிந்து பள்ளம்துறை ஊர் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் பள்ளம்துறை ஊர் மக்களுடன் நேற்று காலை அங்குள்ள ஆலயம் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்த பகுதியில் தேர்தலை புறக்கணிக்கப்போவதாக பதாகையும் வைத்திருந்தனர்.

அன்னை நகருக்கு மாற்றப்பட்டுள்ள 36 வாக்குகளையும் பள்ளம்துறையில் ஏற்கனவே இயங்கி வரும் வாக்குச்சாவடிக்கு மாற்ற வேண்டும் என அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

Public protest against change of polling Station &
The public announce boycott the elections. at Nagercoil
Pallam thurai village.

தினத்தந்தி

12 APR 2024

### தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ள

# போலீசார் தபால் ஓட்டு போடும் பணி தொடக்கம்

## 19 ஆயிரம் பேர் வாக்களிக்கின்றனர்

சென்னை, ஏப்.12-

சென்னையில் நாடாளுமன்ற தேர்தலுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ள 19 ஆயிரம் போலீசார் தபால் வாக்களிக்கும் பணி நேற்று தொடங்கியது.

### தபால் வாக்குப்பதிவு

தமிழ்நாட்டில் வரும் 19-ந் தேதி ஒரே கட்டமாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதில், தேர்தல் நாளில் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவதால் போலீசாரால் நேரில் சென்று வாக்குப் பதிவு செய்ய முடியாது. எனவே, தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மாவட்டத்தில் பணிபுரியும் பிற மாவட்ட மற்றும் சென்னை மாவட்ட போலீசார் என 19 ஆயிரத்து 122 பேர் தபால் வாக்களிக்க படிவம் வழங்கியுள்ளனர்.

அந்தவகையில், தேர்தல் பணியில் ஈடுபட உள்ள போலீசாருக்கு தபால் வாக்களிக்கும் பணி நேற்று காலை 9 மணிக்கு தொடங்கியது. இதற்காக வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை ஆகிய பகுதிகளில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் சிறப்பு வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளது. போலீசார் காலை முதலே ஆர்வமாக வந்து வாக்களித்தனர்.

### வாக்களிக்கும் முறை

தபால். வாக்களிப்போர் வாக்களிக்கும் முறையானது, வாக்குச்சாவடி உள்ளே சென்றதும் அவரின் பெயர் வாசிக்கப்பட்டது. அதன்பின், உறுதிமொழி படிவம் கொடுக்கப்பட்டு, அதில் தபால் வாக்குச்சீட்டு எண் உள்ளிட்ட விவரங்களை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு வாக்குச்சாவடி அலுவலரிடம் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து, தபால் வாக்குச்சீட்டில் தாங்கள் தேர்வு செய்ய விரும்பும் வேட்பாளரின் சின்னத்திற்கு அருகில் உள்ள காலியிடத்தில் டிக் செய்து, இந்த 2 படிவத்தையும் சேர்த்து தபால் வாக்குப்பெட்டியில் போட்டனர். இவ்வாறாக அவர்களின் வாக்கு சேகரிக்கப்பட்டு, வாக்கு சேகரிக்கும் பெட்டிக்கு சீல் வைக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது.

இந்த நிலையில், செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள மத்திய சென்னை தேர்தல் நடத்தும் அலுவலகத்தில் சென்னையில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ள 13 மாவட்டங்களை சேர்ந்த போலீசார் காலை முதலே ஆர்வமுடன் வந்து தபால் வாக்களித்தனர். அப்போது, வாக்கு செலுத்த வந்த போலீசாரிடம் 11-ந் தேதி (அதாவது நேற்று) சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே வாக்கு செலுத்த முடியும் என்றும், பிற மாவட்டத்தை சேர்ந்தவர்கள் நாளை (அதாவது இன்று) தபால் வாக்கு செலுத்தலாம் எனவும் வாக்குச்சாவடி அலுவலர்கள் தெரிவித்தனர்.

### போலீசார் வேதனை

இதனால், சென்னையில் பணிபுரியும் மற்ற மாவட்டத்தை சேர்ந்த போலீசார் வாக்கு செலுத்த முடியாமல் சென்றனர். இதேபோல, சரியான தகவல் தெரிவிக்காததால் அலைக்கழிக்கப்பட்டதாக வேதனை தெரிவித்தனர். முன்கூட்டிய சரியான தேதியை தெரிவித்திருந்தால் அந்த தேதியில் வாக்களிக்க வந்திருப்போம் எனவும் தெரிவித்தனர். மேலும், திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த போலீசார் சிலர் தபால் வாக்களிக்க படிவம் அளித்த நிலையில் பதிவேட்டில் அவர்களின் பெயர் இல்லாததால் அவர்களும் மிகவும் சிரமம் அடைந்தனர்.

முன்னதாக, தென் சென்னை, மத்திய சென்னை, வடசென்னை ஆகிய பகுதிகளில் போலீசாருக்கான தபால் வாக்குப்பதிவினை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி கமிஷனருமான டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், ராதாகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

தபால் வாக்குப்பதிவு நாளை (13-ந் தேதி) வரையில் நடைபெறவுள்ளது. இந்த பணிக்காக 3 சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு, அதற்கான மேற்பார்வையாளர்களுடன் நடைபெற்று வருகிறது. மாவட்டங்கள் அடிப்படையில் தபால் வாக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.




சென்னையில் தபால் ஓட்டு போட்ட போலீஸ்காரர்களை படத்தில் காணலாம்.

News regarding police person postal vote of Chennai

தினத்தந்தி

12 APR 2024

முறைகேட்டில் ஈடுபட முடியும்

# வாக்குப்பதிவு எந்திரம் மூலம் தேர்தல் நடத்தக்கூடாது

## அப்துல் கலாமின் ஆலோசகர் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.12-

சென்னை சேப்பாக்கத்தில் நேற்று அப்துல் கலாமின் முன்னாள் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் நிருபர்களிடம் கூறியதாவது:-

வாக்குப்பதிவு எந்திரத்தில் உள்ள மென்பொருள் மூலமாக முறைகேட்டில் ஈடுபட முடியும். குறிப்பிட்ட சில மணி நேரத்திற்கு பிறகு தனக்கு ஏற்றார் போல அவற்றை மாற்ற முடியும். குறிப்பாக, 'ரீடு ஒன்லி மெமரி' என்ற 'சிப்' மூலமாக சின்னம் பொருத்தும் போது சாதகமானதாக அவற்றை மாற்ற முடியும். எனவே, வாக்குப்பதிவு எந்திரம் மூலமாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக்கூடாது. அமெரிக்காவில் அனைத்தும் மின்னணு சாதனமாக மாறியிருந்தாலும், வாக்குப்பதிவு இன்றும் வாக்குச்சீட்டு முறையில் நடைபெறுகிறது. வாக்குப்பதிவு எந்திரத்தை 'புளூடூத்', இணையதளம் மற்றும் சென்சார் மூலமாக முடக்க முடியாது என்ற தேர்தல் ஆணையத்தின் வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதே வேளையில் அதில் தங்களுக்கு ஏற்றார் போல மாற்றம் செய்துகொள்ள முடியும். எனவே, இந்திய தேர்தல் ஆணையம் வாக்குப்பதிவு எந்திரத்தின் கணினி மென்பொருளை ஆய்வு செய்ய தன்னிச்சையான குழுவை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நம்பிக்கை ஏற்படும். 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் 80 கோடி மக்களின் வாக்குகள் இந்தியாவின் சக்தி யார் என்பதை தீர்மானிக்கிறது. ஒருவர் எந்த கட்சிக்கு வாக்களித்தோம் என்பதை வெளிப்படையாக தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால் ரஷியாவில் கடந்த 20 ஆண்டுகளாக விளாடிமிர் புதின் மட்டுமே அதிபராக இருப்பது போன்ற நிலை இந்தியாவில் உருவாகிவிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

former president of India Thiru. A.P.J Abdul Kalam sir Advisor Panraj says that malpractice can indulge in Evms

தினத்தந்தி
12 APR 2024

### தேர்தல் சோதனையில்

# ரூ.305 கோடி ரொக்கம், தங்கம் பறிமுதல்

சென்னை, ஏப்.12-

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, தமிழகத்தில் பறக்கும் படை, நிலையான கண்காணிப்பு குழுக்கள் போன்றவை பல்வேறு இடங்களில் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் தமிழகத்தில் இதுவரை ரூ.305 கோடியே 36 லட்சம் மதிப்புள்ள பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன.

அதில் ரொக்கமாக ரூ.144 கோடியே 44 லட்சத்து 58 ஆயிரமும், கைப்பற்றப்பட்ட மதுபான வகைகளின் மதிப்பு ரூ.5 கோடியே 13 லட்சத்து 6 ஆயிரமும், போதைப் பொருட்களின் மதிப்பு ரூ.94 லட்சத்து 6 ஆயிரமும், தங்கம் உள்ளிட்ட விலையுயர்ந்த ஆபரணங்களின் மதிப்பு ரூ.121 கோடியே 76 லட்சத்து 77 ஆயிரமும், இலவச பரிசுப் பொருட்களின் மதிப்பு ரூ.33 கோடியே 8 லட்சத்து 10 ஆயிரமும் அடங்கும்.

இந்த தகவலை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வெளியிட்டுள்ளார்.

As of now 305 crore were seized in Tamil Nadu.

தினத்தந்தி
12 APR 2024

### 2–வது நாளாக வருமான வரித்துறையினர் சோதனை:

# காங்கிரஸ் பிரமுகர் வீட்டில் ரூ.3¼ கோடி பறிமுதல்

கூடலூர், ஏப்.12-
கூடலூர் அருகே 2-வது நாளாக காங்கிரஸ் பிரமுகர் வீட்டில் வருமானவரித் துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். இதில் ரூ.3¼ கோடி பறிமுதல் செய்யப்பட்டது.

**திடீர் சோதனை**

நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா ஸ்ரீமதுரை ஊராட்சி கம்மாத்தியில் வசிப்பவர் ஏ.ஜெ.தாமஸ். காங்கிரஸ் கட்சி நிர்வாகியாகவும், வணிகர் சங்க பேரமைப்பு மாநிலத் துணைத் தலைவராகவும் உள்ளார். இவரது வீட்டில் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு வருமான வரித்துறையினர் திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது முக்கிய ஆவணங்களை கைப்பற்றி தொடர் விசாரணையில் ஈடுபட்டனர். பின்னர் கூடலூர்-ஊட்டி சாலையில் உள்ள வங்கிக்கு வருமான வரித்துறையின் ஒரு குழுவினர் சென்று பணப்பரிவர்த்தனைகள் குறித்து விசாரித்தனர். இந்த சமயத்தில் தாமஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் வீட்டை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படவில்லை. மேலும் நுழைவுவாயில் கதவும் அடைக்கப்பட்டிருந்தது.

காலையில் தொடங்கிய சோதனை இரவு மற்றும் விடியற்காலை வரை நீடித்தது.

**2-வது நாளாக நீடித்தது**

தொடர்ந்து நேற்று 2-வது நாளாக தாமஸ் வீட்டில் சோதனை மற்றும் விசாரணையில் ஈடுபட்டனர். சுமார் 28 மணி நேரத்துக்கும் மேலாக வருமான வரித்துறையினர் தாமஸ் வீட்டில் இருந்தனர். பின்னர் முக்கிய ஆவணங்களை தங்களது காரில் எடுத்துக்கொண்டு மாலை 3.50 மணிக்கு புறப்பட்டனர்.

இதுகுறித்து வருமான வரித்துறையினர் கூறுகையில், நாடாளுமன்ற தேர்தல் நெருங்குவதால் வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்வதற்காக முக்கிய பிரமுகர்களின் வீடுகளில் கோடிக்கணக்கில் பணம் பதுக்கி வைக்கப்பட்டு உள்ளதாக தகவல்கள் வந்தன. அதன் அடிப்படையில் காங்கிரஸ் பிரமுகர் தாமஸ் வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. இதில் முக்கிய ஆவணங்கள் சிக்கின. மேலும் ரூ.3¼ கோடி பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. இந்த தொகை ஊட்டியில் உள்ள ஒரு வங்கியில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது என்றனர். மற்ற விவரங்களை வருமான வரித்துறையினர் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

இதையடுத்து வீட்டை விட்டு வெளியே வந்த தாமஸ் கூறும்போது, வணிக ரீதியான சில ஆவணங்களை அதிகாரிகள் எடுத்துச் சென்றுள்ளனர். 100 ரூபாய் கூட எனது வீட்டிலிருந்து வருமானவரித் துறையினர் பறிமுதல் செய்யவில்லை என தெரிவித்தார்.

3¼ Crore were seized in the continuous search in Congress party persons house.

தினத்தந்தி

12 APR 2024

கடலூரில்

# சரக்கு வாகனத்தில் ரூ.8 லட்சம் பேண்ட்-சட்டைகள் சிக்கின

## தேர்தல் கண்காணிப்புக்குழு அதிரடி

கடலூர், ஏப்.12-

நாடாளுமன்ற தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசுப்பொருட்கள் வழங்குவதை தடுக்க கடலூர் சட்டமன்ற தொகுதி நிலையான கண்காணிப்பு குழு குழுவினர் ஆல் பேட்டை சோதனைச்சாவடியில் வாகன சோதனை நடத்தி வந்தனர். அப்போது புதுச்சேரியில் இருந்து கடலூர் நோக்கி சரக்கு வாகனம் ஒன்று வந்தது. அந்த வாகனத்தை அதிகாரிகள் வழிமறித்து சோதனை செய்தனர். சோதனையில் 28 மூட்டைகளில் ஆண்களுக்கான பேண்ட், சட்டைகள் இருந்தன. அதற்கான ஆவணங்களை கண்காணிப்பு குழுவினர் கேட்டனர். ஆனால் அதை கொண்டு வந்த டிரைவரிடம் உரிய ஆவணங்கள் இல்லை. விசாரணையில், புதுச்சேரியில் உள்ள பிரபல ஜவுளிக்கடையில் இருந்து பேண்ட்-சட்டைகளை கடலூர் கிளை கடைக்கு கொண்டு வந்தது தெரிந்தது. இருப்பினும் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுவரப்பட்ட பேண்ட்-சட்டைகளை கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ.7 லட்சத்து 98 ஆயிரத்து 357 ஆகும்.

Rs 8 lakhs pants of shirts were seized from cargo van in Cuddalore dist.

தினத்தந்தி

12 APR 2024

# பறக்கும் படை சோதனையில் ரூ.1 லட்சம் பறிமுதல்

பெரம்பூர், ஏப்.12-

சென்னை பெரம்பூர் நெடுஞ்சாலையில் சென்னை குடிநீர் வாரிய அலுவலகம் எதிரே வாகன சோதனையில் ஈடுபட்ட தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள், அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த வியாசர்பாடியை சேர்ந்த முகமது பசித் (வயது 26) என்பவரை நிறுத்தி சோதனை செய்தனர். அவர் உரிய ஆவணங்கள் இன்றி வைத்திருந்த ரூ.75 ஆயிரத்து 810-ஐ பறிமுதல் செய்தனர்.

இதேபோல் வியாசர்பாடி அம்பேத்கர் கல்லூரி எதிரே வாகன சோதனையில் ஈடுபட்ட பறக்கும் படையினர், அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் தண்டையார்பேட்டையை சேர்ந்த ராஜா சதீஷ்குமார் என்பவர் உரிய ஆவணம் இன்றி கொண்டு சென்ற ரூ.61 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர்.

2 பேரிடம் பறிமுதலான ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 810 ரூபாயை அரசு கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

1 lakhs were seized by flying squad.

தினமலர்
12 APR 2024

# புறக்கணிக்கும் ஏகனாபுரம் கிராமத்தினர் ஓட்டளிக்க தேர்தல் அதிகாரிகள் சமரசம்

**காஞ்சிபுரம், ஏப். 12–**

சென்னையின் இரண்டாவது விமான நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம், பரந்துாரில் புதிதாக அமைய உள்ளது. இதற்காக, பரந்துார் மற்றும் அதைச் சுற்றிய கிராமங்களில், 5,400 ஏக்கர் தேவை. அதில், 3,750 ஏக்கர் விவசாயிகள் மற்றும் கிராம மக்களிடம் இருந்து கையகப்படுத்தப்பட்டு வருகிறது. மீதி அரசுக்கு சொந்தமான நிலம்.



ஏகனாபுரம் கிராம மக்களிடம், லோக்சபா தேர்தலில் அனைவரும் ஓட்டளிக்க வேண்டும் என, தேர்தல் பொது பார்வையாளர் அபிஷேக் சாந்த் பேசினார். உடன், எஸ்.பி., சண்முகம், கலெக்டர் கலைச்செல்வி ஆகியோர் உள்ளனர்.

பரந்துார் புதிய விமான நிலையத்திற்கு நிலம் எடுக்கும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஏகனாபுரம் கிராமத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். லோக்சபா தேர்தலில் ஓட்டளிக்க மாட்டோம் என, கிராம மக்கள் அறிவித்தனர்.

இதையடுத்து, காஞ்சிபுரம் கலெக்டர் கலைச்செல்வி மற்றும் லோக்சபா தேர்தல் பொது பார்வையாளர் அபிஷேக் சாந்த், ஏகனாபுரம் கிராமத்தினர் இடையே சமரச பேச்சு நடத்தினர்.

'ஓட்டளிப்பது அனைவரின் கடமை. அதில் இருந்து நீங்கள் விலகக் கூடாது' என, அவர் கேட்டுக் கொண்டார்.

'விவசாய நிலமாக இருப்பதால், 'விமான நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்தக்கூடாது' என, கலெக்டர் அறிக்கை அளித்தால் போதும். நிலம் கையகப்படுத்தும் பணி நிறுத்தப்படும். அதை செய்ய மறுப்பது ஏன்?' என, கிராம மக்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு கலெக்டர் நேரடியாக பதில் அளிக்கவில்லை. கூட்டம் முடிந்த பிறகு, 'ஓட்டளிக்கப் போவதில்லை என்ற முடிவில் மாற்றம் இல்லை' என, கிராமத்தினர் தெரிவித்தனர்.

Collector T.m.t Kalaiselvi, General observer Thiru Abishek chant Negotiations with parandhur people to Avoid the Boycott of election 2024.

தினமலர்
12 APR 2024

# ஓட்டுப்பதிவு முடிந்ததும் விதிகளை தளர்த்த கோரிக்கை

ஈரோடு, ஏப். 12–

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு எனும், 'பேட்டியா' சார்பில், தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூக்கு அனுப்பிய கடிதத்தில், தலைவர் ராஜமாணிக்கம் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில், 20 நாட்களுக்கு மேலாக தேர்தல் நடத்தை விதி அமலில் உள்ளதால், மளிகை, ஜவுளி, ஹார்டுவேர், எலக்ட்ரிக்கல் என பல தரப்பினர் விற்பனை மற்றும் கொள்முதலுக்கு ரொக்கமாக பணத்தை எடுத்து செல்ல சிரமப்படுகின்றனர்; பொருளாகவும் எடுத்து செல்ல முடியவில்லை.

வரும் 19ல் ஓட்டுப்பதிவுக்கு பிறகும், ஜூன் 4ல் ஓட்டு எண்ணிக்கை முடியும் வரை, தேர்தல் நடத்தை விதி தொடரும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதனால் தொழில், வணிகம் முற்றிலும் முடங்கிவிடும் சூழல் உருவாகும்.

எனவே, ஓட்டுப்பதிவு முடிந்ததும், தேர்தல் நடத்தை விதிகளை வாபஸ் பெற அறிவிப்பு வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார்.

Merchant of Erode request CEO to free the elections rule to Carray up Money.

தினமணி

12 APR 2024

# ஆ.ராசாவுக்கு ஆதரவாக செயல்பட அழுத்தம்

## மாவட்ட தேர்தல் அதிகாரி மீது உதவி செலவின பார்வையாளர் புகார்

சென்னை/உதகை, ஏப். 11: நீலகிரி மக்களவைத் தொகுதி திமுக வேட்பாளர் ஆ.ராசாவுக்கு ஆதரவாக அவரது செலவுக் கணக்குகளைத் திருத்த வேண்டுமென தனக்கு கடும் அழுத்தம் தரப்படுவதாக உதவி செலவினப் பார்வையாளர் பி.சரவணன் புகார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த புகார் கடிதத்தை தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகுவுக்கு, அவர் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

நீலகிரி தொகுதியின் உதவி செலவினப் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். எனக்கு வழங்கப்பட்டுள்ள வரன்முறைகளின் அடிப்படையில் பணியாற்றி வருகிறேன்.

பிரசாரத்தின்போது, வேட்பாளர்கள் செலவிடும் தொகைகளை ஆய்வு செய்து நிழல் பதிவேடுகளை உருவாக்கும் பணிகளில் எனது குழு ஈடுபட்டு வருகிறது.

அதன்படி, நீலகிரி தொகுதி திமுக வேட்பாளர் ஆ.ராசாவின் செலவினக் கணக்குகளையும் ஆய்வு செய்து நிழல் பதிவேட்டைத் தயாரித்துள்ளோம்.

அதில் நாங்கள் குறிப்பிட்டுள்ள செலவுக் கணக்கு விவரங்களை அப்படியே பதிவேட்டில் தெரிவிக்காமல், குறைத்து மதிப்பிடும்படி மாவட்டத் தேர்தல் அதிகாரி தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறார்.

திமுக வேட்பாளரின் குரலாக அவர் செயல்படுவதுடன், செலவுக் கணக்கு விவரங்களில் அவருக்கு சாதகமாக நடந்து கொள்ள வலியுறுத்துகிறார்.

கடந்த 9-ஆம் தேதி என்னை தனது முகாம் அலுவலகத்துக்கு மாவட்டத் தேர்தல் அதிகாரி அழைத்தார். நான் வைத்திருந்த வேட்பாளர்களின் நிழல் செலவு பதிவேடுகளை கைப்பேசி மூலம் புகைப்படம் எடுத்துக் கொண்ட அவர், தேர்தல் பார்வையாளரின் கீழ் செயல்படாமல், தான் சொல்வது போன்று தனக்குக் கீழ் பணியாற்ற வேண்டுமென கட்டாயப்படுத்தினார்.

திமுக வேட்பாளருக்கு எதிராக செயல்பட்டால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற வகையில் அவரது பேச்சு அமைந்திருந்தது. அத்துடன், வேட்பாளரின் நிகழ் செலவுக் கணக்கு விவரங்களைக் குறைத்து மதிப்பிடும் பணிகளை உடனடியாக பார்க்கச் சொல்லி உத்தரவிட்டார்.

இந்தப் பிரச்னையில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு, நீலகிரி தொகுதியில் சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அந்த கடிதத்தில் பி.சரவணன் குறிப்பிட்டுள்ளார்.

### 'வேட்பாளர்களுக்கு நோட்டீஸ்'

தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி செலவினப் பார்வையாளர் புகார் கடிதம் அனுப்பியிருந்த நிலையில், நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மு.அருணா வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நீலகிரி தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்கத் தேர்தல் ஆணையத்தால் இரண்டு செலவினப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு செலவினம் தொடர்பான ரசீதுகள், பதிவேடுகள் வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே செலவின கணக்குகளை நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செலவினப் பார்வையாளர்கள் கடந்த 8-ஆம் தேதி ஆய்வு செய்தனர். மேலும், இது தொடர்பாக ஆய்வுக் கூட்டம் வருகிற ஏப். 12, 17 ஆகிய தேதிகளிலும் நடைபெறவுள்ளது.

கடந்த ஆய்வுக் கூட்டத்துக்கு வராத வேட்பாளர்களுக்கும், வரவு-செலவுக் கணக்கில் வித்தியாசம் உள்ள வேட்பாளர்களுக்கும் விளக்கம் கேட்பு குறிப்பாணை வழங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Asst. Expenditure Observer complaint against DEO Nilgiris for pressure him to be favor to Thiru. Raja.

தினமணி

12 APR 2024

# வாக்குப் பதிவு 'கவுன்ட்டவுன்' தொடக்கம்

## தேர்தல் துறையின் புதிய உத்தி

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவுக்கான கவுன்ட்டவுனை மாநிலத் தேர்தல் துறை தொடங்கியுள்ளது. 'வாக்குப் பதிவுக்கு இன்னும் எட்டு நாள்களே...' என எக்ஸ் சமூக வலைதளத்தில் வியாழக்கிழமை குறிப்பிட்டுள்ள தேர்தல் துறை, 'சிந்தித்து வாக்களியுங்கள்' என்ற வாசகத்தையும் முன்வைத்துள்ளது.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு வரும் 19–ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் பிரசார களம் சூடுபிடித்துள்ளது. அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் ஒருபுறம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட, வாக்குப் பதிவை நடத்தக் கூடிய தமிழக தேர்தல் துறையும் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு பிரசாரத்தில் விறுவிறுப்பை காட்டி வருகிறது.

வாக்குப் பதிவு தேதியை முன்வைத்து கவுன்ட்டவுன் வெளியிட்டு வருவது, வாக்குப் பதிவின் அவசியத்தை இளம் வாக்காளர்கள் அறியும் வகையில் வாசகங்களை இடம்பெறச் செய்வது போன்ற விழிப்புணர்வுப் பணிகளை 'எக்ஸ்' வலைதளத்தின் ஊடாக தமிழக தேர்தல் துறை செய்து வருகிறது.

அவற்றில் குறிப்பிடத்தக்க வாசகங்கள் சில: 'நாட்டில் வலுவான ஜனநாயகம் தழைத்தோங்க, ஒவ்வொருவரின் வாக்கும் முக்கியம். எனவே, விழிப்புணர்வுடன் வாக்களியுங்கள்'; 'என் வாக்கு விற்பனைக்கு அல்ல'. 'உங்கள் வாக்கு, உங்கள் குரல்'; 'வாக்குப் பதிவின் போது உங்கள் கை விரலில் இடப்படும் குறியீடு வெறும் அடையாளம் இல்லை; அது உங்களுடைய எதிர்காலத்தை வடிவமைக்கும் முடிவு' என்பன போன்ற வாசகங்களை எக்ஸ் சமூகவலைதளத்தில் தேர்தல் துறை வெளியிட்டுள்ளது. வாக்குப் பதிவு தினம் வரையிலும் தொடர்ந்து கவுன்ட்டவுன் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.




வாக்குப்பதிவு தேதியை நினைவூட்டி 'எக்ஸ்' தளத்தில் வியாழக்கிழமை கவுன்ட் டவுன் தொடங்கிய தமிழக தேர்தல் துறை.

## தலைவர்கள் இன்று பிரசாரம்

தமிழகத்தில் வெள்ளிக்கிழமை (12.04.2024) அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பிரசாரம் செய்யும் பகுதிகள்.

| | |
|---|---|
| மத்திய அமைச்சர் அமித் ஷா (பாஜக) | மதுரை. |
| மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் (பாஜக) | ஒசூர் (கிருஷ்ணகிரி) |
| ராகுல் காந்தி (காங்கிரஸ்) | திருநெல்வேலி, கோவை. |
| முதல்வர் மு.க.ஸ்டாலின் | கோவை, |
| எடப்பாடி கே. பழனிசாமி (அதிமுக) | நாமக்கல், சேலம். |
| கே. அண்ணாமலை (பாஜக) | கோவை, நீலகிரி. |
| கு. செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்) | திருநெல்வேலி, கோவை. |
| கனிமொழி கருணாநிதி (திமுக) | தூத்துக்குடி. |
| உதயநிதி ஸ்டாலின் (திமுக) | தென்காசி, தூத்துக்குடி. |
| சீதாராம் யெச்சூரி (மார்க்சிஸ்ட்) | திண்டுக்கல். |
| ஜி. ராமகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்) | வட சென்னை. |
| கே. பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்) | கடலூர். |
| டி. ராஜா (இந்திய கம்யூ) | மதுரை. |
| இரா. முத்தரசன் (இந்திய கம்யூ) | தேனி. |
| வைகோ (மதிமுக) | தூத்துக்குடி. |
| அன்புமணி ராமதாஸ் (பாமக) | ஆரணி, கள்ளக்குறிச்சி |
| பிரேமலதா விஜயகாந்த் (தேமுதிக) | ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல். |
| ஜி.கே.வாசன் (தமாகா) | ஈரோடு. |
| சீமான் (நாம் தமிழர் கட்சி) | விழுப்புரம், ஆரணி, திருவண்ணாமலை. |

News article regarding E.C. New strategy

தினமணி
12 APR 2024

# சிறையிலிருந்து வாக்களித்த கைதிகள்!

மக்களவைத் தேர்தலையொட்டி, தமிழக சிறைகளிலிருந்து தகுதியுடைய கைதிகள் தபால் வாக்கு அளித்தனர்.

மக்களவைத் தேர்தலையொட்டி 100 சதவீத வாக்குப்பதிவை எட்டுவதற்காக தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளும் வாக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் விளைவாக தமிழக சிறைகளில் இருக்கும் கைதிகளில் 90 பேர் இந்த முறை வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

தமிழக சிறைகளில் தண்டனைக் கைதிகள், விசாரணைக் கைதிகள், தடுப்புக் காவல் கைதிகள் என மொத்தம் 16,000 பேர் உள்ளனர். இவர்களில் விசாரணைக் கைதிகள், தடுப்புக் காவல் கைதிகள் ஆகியோர் வாக்களிப்பதற்கு தகுதியானவர்கள் ஆவார்கள்.

ஆனால், விசாரணைக் கைதிகள், குறிப்பிட்ட நாள்களுக்குப் பின், பிணையில் சென்றுவிட முடியும் என்பதால், அவர்களுக்கு சிறையில் இருந்து வாக்களிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. இதனால் குண்டர் தடுப்புச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறையில் இருப்பவர்கள் மட்டும் வாக்களிக்க சிறைத் துறை அனுமதி வழங்குகிறது.

| ஆண்டு | தேர்தல் | வாக்களித்த கைதிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014 | மக்களவைத் தேர்தல் | 74 |
| 2016 | சட்டப்பேரவைத் தேர்தல் | 86 |
| 2019 | மக்களவைத் தேர்தல் | 132 |
| 2021 | சட்டப்பேரவைத் தேர்தல் | 15 |

இந்தக் கைதிகளிடம் மக்களவைத் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பாக சிறைத் துறை இரு வாரங்களுக்கு முன்பு அறிவிப்பு வெளியிட்டது. இதில் வாக்களிக்க விருப்பமுள்ள 96 கைதிகள் தங்களது பெயர், தொகுதி, வாக்காளர் அடையாள அட்டை, பூத் எண் உள்ளிட்ட விவரங்களைக் கொடுத்தனர். இவர்களில் தகுதியுடைய 90 பேருக்கு மட்டும் சிறைத் துறை அனுமதி வழங்கியது.

**பாளையங்கோட்டை அதிகம்:** பாளையங்கோட்டை மத்திய சிறையில் அதிகபட்சமாக 84 கைதிகள் வாக்களிக்க அனுமதி கேட்ட நிலையில் 79 கைதிகள் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டது. இவர்கள் வியாழக்கிழமை தபால் வாக்களித்தனர்.

சேலம் மத்திய சிறையில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்ட ஒரு கைதி, கடந்த 8-ஆம் தேதி தபால் வாக்களித்தார். வேலூர் மத்திய சிறையில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்ட 10 கைதிகளும் ஏப்ரல் 16-ஆம் தேதிக்குள் வாக்களிப்பார்கள் என சிறைத் துறையினர் தெரிவித்தனர். கைதிகள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் சிறைத் துறை ஏடிஜிபி மகேஷ்வர் தயாள் செய்துள்ளார். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக சிறைகளில் 15 கைதிகள் மட்டுமே வாக்களித்த நிலையில், இந்த முறை சிறைத் துறை அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக வாக்களித்த கைதிகளின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்துள்ளது.

இது தொடர்பாக சிறைத் துறை உயர் அதிகாரி கூறியது: அனைத்து மத்திய சிறைகளிலும் தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் அனைவரும் வாக்களிக்கும்படி ஊக்கம் அளிக்கப்பட்டது. விருப்பம் தெரிவித்த கைதிகளில் போதுமான ஆவணங்கள் இல்லாமல் இருந்த பெரும்பாலானவர்களில் இருந்தாலும், அவர்களிடம் சரியான தகவல் இல்லாததாலும் விண்ணப்பிக்கும் தகுதியை இழந்துவிட்டனர்.

விண்ணப்பித்த 96 பேரில் 90 கைதிகள் தபால் வாக்கு அளிக்க தகுதியானவர்கள் என தேர்தல் ஆணையம் அறிவித்து, தபால் வாக்குச்சீட்டுகளை வழங்கியது.

இனி வரும் தேர்தல்களில் இந்த எண்ணிக்கையை மேலும் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

– கே.வாசுதேவன்




Eligible prisoners cast their vote from prison.

தினமணி
12 APR 2024

வருமான வரித் துறை சோதனை

# நெல்லையில் ஒரே நாளில் ரூ.1.18 கோடி பணம், தங்கம் பறிமுதல்

திருநெல்வேலி, ஏப். 11: திருநெல்வேலி சட்டப்பே
ரவைத் தொகுதியில் கடந்த 9-ஆம் தேதி வருமான
வரித் துறையினர் நடத்திய சோதனையில் ரூ.17.80
லட்சம் ரொக்கமும், ரூ.1.38 கோடி மதிப்பிலான
2.250 கிலோ தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்
ளது.

இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவல
ரும், ஆட்சியருமான கா.ப. கார்த்திகேயன் வெளி
யிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநெல்வேலி மக்கள
வைத் தொகுதிக்குள்பட்ட திருநெல்வேலி சட்டப்
பேரவைத் தொகுதியில் வருமான வரித் துறையி
னர் கடந்த 9-ஆம் தேதி நடத்திய சோதனையில்
ரூ.17.80 லட்சம் ரொக்கமும், ரூ.1.38 கோடி மதிப்பி
லான 2.250 கிலோ தங்கமும் பறிமுதல் செய்யப்பட்
டுள்ளது. ஆனால், யார் வீட்டில் சோதனை நடத்
தப்பட்டது? யாரிடம் இருந்து பணமும், நகையும்
பறிமுதல் செய்யப்பட்டது? இந்த விவரங்கள் தெரி
விக்கப்படவில்லை.

திருநெல்வேலி மக்களவைத் தொகுதியைப்
பொருத்தவரையில் கடந்த சில தினங்களுக்கு
முன்பு பாளையங்கோட்டை சட்டப்பேரவைத்
தொகுதியில் திமுக கிழக்கு மாவட்டச் செயலர்
இரா.ஆவுடையப்பன் அலுவலகம், அரசு ஒப்பந்
ததாரர் ஆர்.எஸ்.முருகன் அலுவலகம் ஆகியவற்
றில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தி
னர். அங்கு பணம் கைப்பற்றப்பட்டதா என்ற தக
வல் தெரிவிக்கப்படவில்லை.

இம்மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையி
னர், நிலையான படையினர், போலீஸார், வரு
மான வரித் துறையினர் ஆகியோர் இதுவரை நடத்
திய சோதனையில் ரொக்கம், மதுபானம், தங்கம்
என மொத்தம் ரூ.2 கோடியே 36 லட்சத்து 49 ஆயி
ரத்து 815 மதிப்பிலான பணம் மற்றும் பொருள்
கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளார்.

1.18 Crore cash were seized from IT Raid
at Tirunelveli dist.

தினகரன்

12 APR 2024

## சென்னையில் போலீசார்

# தபால் வாக்கு அளிக்க 3 இடங்களில் ஏற்பாடு

### நாளை மாலை 5 மணி வரை செலுத்தலாம்



▶ செனாய் நகர் மண்டல அலுவலகத்தில் தபால் ஓட்டுப் பதிவு நேற்று நடந்தது. காவல்துறையினர் கலந்துகொண்டு வாக்குப்பதிவு செய்தனர்.

சென்னை, ஏப். 12: சென்னையில் போலீசார் தபால் வாக்கு செலுத்த 3 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் நாளை மாலை 5 மணி வரை தபால் வாக்களிக்க அளிக்கலாம்.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகர காவல் துறையில் பணியாற்றுபவர்களில் தபால் வாக்கு கேட்டு விண்ணப்பித்த காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அனைவரும் நேற்று முதல் 13ம் தேதி (நாளை) வரை காலை 9 முதல் மாலை 5 மணி வரை தபால் வாக்குகளை செலுத்த சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 3 தேர்தல் நடத்தும் அலுவலர்களின் அலுவலகத்தில் சிறப்பு தபால் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை பேசின் பாலம் சாலை, மூலக்கொத்தளம் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சியின் வடசென்னை வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு தபால் வாக்குச்சாவடி மையத்தில் வடசென்னை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, ஆரணி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், பெரம்பலூர் ஆகிய மக்களவை தொகுதிகளை சேர்ந்தவர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம்.

அடையாறு, முத்துலட்சுமி சாலையில் உள்ள தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில், தென் சென்னை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தொகுதிகளை சேர்ந்தவர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம். செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள மத்திய வட்டார துணை ஆணையர் அலுவகத்தில் மத்திய சென்னை, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம், நீலகிரி, கோவை, பொள்ளாச்சி, திண்டுக்கல், கரூர், திருச்சி, கடலூர், சிதம்பரம் மற்றும் புதுச்சேரி ஆகிய தொகுதிகளை சேர்ந்தவர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம்.

தகுதியுள்ள போலீசார் வாக்குச்சாவடிகளுக்கு தகுந்த ஆவணங்கள் மற்றும் காவலர் அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

News regarding police cast their postal vote.

தினகரன்

12 APR 2024

# தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் ஆய்வு

சென்னை, ஏப். 12: சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான காவல் அலுவலர்கள் மற்றும் போலீசாருக்கான தபால் வாக்குப்பதிவு நடந்ததை மாவட்ட தேர்தல் அலுவலர், ஆணையர் ராதாகிருஷ்ணன் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் சென்னை தெற்கு நாடாளுமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் தொடர்பான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதை தொடர்ந்து, தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் நடந்த காவல் அலுவலர்கள் மற்றும் ஆளிநர்களுக்கான தபால் வாக்குப்பதிவை பார்வையிட்டார்.

Chennai D.E.O inspect the postal vote for police at chennai

தினகரன்
12 APR 2024

மத்திய சென்னையில் பிரசாரத்திற்கு சென்ற

# திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் காரில் மீண்டும் சோதனை

**படிப்பதற்கான பேப்பர் மட்டுமே இருந்ததால் பறக்கும்படை ஏமாற்றம்**

சென்னை, ஏப்.12: தேர்தல் பிரசாரத்திற்கு நேற்று காலை புறப்பட்டு சென்ற மத்திய சென்னை திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் காரில் பறக்கும் படையினர் மீண்டும் சோதனை நடத்தினர். அப்போது காரில் அவர் படிப்பதற்காக வைத்திருந்த பேப்பர் மட்டுமே இருந்ததால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மத்திய சென்னை தொகுதி திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் தனது தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தினசரி காலை, மாலை என தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர். செல்லும் இடங்களில் எல்லாம் தயாநிதி மாறன் எழுச்சியுரையாற்றி வருகிறார். அவரின் பேச்சு வாக்காளர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சென்ட்ரல் ரயில் நிலையம் வால்டாக்ஸ் சாலை அருகே தயாநிதி மாறன் பிரசாரத்தில் ஈடுபட்டார். பிரசாரத்தை முடித்துக்கொண்டு திரும்பும் போது அவரது காரை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் திடீரென மடக்கி சோதனை செய்தனர். ஆனால், காரில் பணம், பரிசு பொருட்கள் உள்ளதா என்று தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்தனர். அதில் எதுவும் கிடைக்காததால் தயாநிதி மாறனை அனுப்பி வைத்தனர்.

நேற்று காலை மத்திய சென்னை தொகுதி திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் துறைமுகம் பகுதி அன்னை சத்யா நகர் அப்பாராவ் கார்டன் பகுதியில் பிரசாரம் செய்வதற்காக காரில் புறப்பட்டு சென்றார். அவரது கார் சென்னை கஸ்தூரி ரங்கன் சாலையில் வந்த போது திடீரென காரை தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்வதற்காக நிறுத்தினர். உடனடியாக காரை தயாநிதி மாறன் நிறுத்த சொன்னார். தொடர்ந்து தேர்தல் பறக்கும் படையினர் சோதனை நடத்த அவர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார். அவரது காரின் அனைத்து பகுதிகளிலும் பறக்கும் படையினர் சோதனை நடத்தினர்.

அப்போது அவரது காரில் அவர் படிப்பதற்காக வைத்திருந்த தினசரி நாளிதழ் மட்டுமே இருந்தது. காரில் வேறு எந்த பொருட்களும் இல்லை. தொடர்ந்து சோதனை முழுமையாக முடிந்து விட்டதா, நான் கிளம்பலாமா என்று கேட்ட பின்னரே தயாநிதி மாறன் அங்கிருந்து காரில் ஏறி பிரசாரத்திற்கு புறப்பட்டு சென்றார். இதுவரை மத்திய சென்னை தொகுதி திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் காரை 4 முறை பறக்கும் படையினர் சோதனை நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Again a car check conduct by flying squad in DMK candidate car.